இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். அங்குக் கிறிஸ்து கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். இவ்வுலகு சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள். ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவோடு இறந்துவிட்டீர்கள். உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது. கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர். அவர் தோன்றும்பொழுது நீங்களும் அவரோடு மாட்சி பொருந்தியவராய்த் தோன்றுவீர்கள்” (கொலோ 3: 1-4)

# ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் வளர்ச்சியில் ஆசியத் திருஅவை

வத்திக்கான்: ஆசியக் கண்டத்தில் சிறுபான்மையாக இருந்தாலும், கல்வி, நலத்துறை, சமுதாயத் திட்டங்கள் போன்றவைகள் வழியாக ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களிடையே தலத்திருஅவைகள் சிறப்புப் பங்காற்றி வருவதாக அக்கண்டத்தின் ஒன்றிணைந்த திருஅவை ஏடு ஓர் ஆய்வறிக்கை வெளியிட்டுள்ளது.

திருஅவை மக்களின் ஒருங்கிணைந்த பயணம் குறித்த உலக ஆயர் மாமன்றக் கூட்டத்தின் ஒரு பகுதியாக தாய்லாந்தின் பாங்காக்கில் கூடி விவாதித்த ஆசிய ஆயர்கள் வெளியிட்ட இறுதி அறிக்கை இவ்வாறு தெரிவிக்கிறது.


ஆசிய ஆயர் பேரவை - பாங்காங்

17 ஆயர் பேரவைகள், இரு கீழை வழிபாட்டுமுறை ஆயர் மன்றங்கள் இணைந்து கடந்த மாதம் பிப்ரவரி 24 முதல் 26 வரை தாய்லாந்தில் கூடி விவாதித்ததன் இறுதி அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டது.

460 கோடி மக்கள் தொகையைக் கொண்டுள்ள ஆசியக் கண்டத்தில் 3.31 விழுக்காட்டினரே கத்தோலிக்கர்களாக இருக்கின்றபோதிலும், ஆசியக் கண்டத்தில் பல்வேறு சமுதாய முன்னேற்றத் துறைகளில், தலத்திருஅவைகள் ஆற்றிவரும் பணி மிகப்பெரிய அளவில் உள்ளன என்று ஆயர்கள் தங்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு சமய நம்பிக்கையாளர்களைக் கொண்டுள்ள ஆசியாவில் கலந்துரையாடல்கள், அமைதியைக் கட்டி யெழுப்புதல், ஒப்புரவு, இணக்க வாழ்வு போன்ற துறைகளில் கத்தோலிக்க திருஅவையின் செயல்பாடுகள் குறிப்பிடும்படியானவை என்பதை எடுத்துரைக்கும் இவ்வறிக்கை, திருஅவையில் பொதுநிலையினரின் ஈடுபாட்டை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது.

ஆசியத் திருஅவைகளில், கத்தோலிக்கர்களைச் சீரிய பயிற்சி வழி உருவாக்குதல், உள்ளடக்கமும் இன்முக வரவேற்பும், மறைப்பணிச் சீடர்கள், பொறுப்புடைமையும் வெளிப் படைத்தன்மையும், இறைவேண்டல், வழிபாடு, சுற்றுச்சூழல் என பல்வேறு தலைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தங்கள் கருத்துக்களை இவ்வேட்டில் வடித் துள்ளனர் ஆசிய ஆயர்கள்.

ஆசிய மக்களை அதிகம் பாதிக்கும் ஏழ்மையும், சுரண்டலும் ஆசிய திருஅவையின் கவனத்தை ஈர்க்க வேண்டும். ஆசியாவில் கோடிக்கணக்கான மக்கள் பல நூற்றாண்டுகளாக பொருளாதார, பண்பாட்டு, அரசியல் துறைகளில் அடிமைப்படுத்தப்பட்டு சமுதாயத்தின் விளிம் பிற்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை. இயேசு தம் சீடர்கள் மீது தூய ஆவியாரை ஊதி பூமியின் கடை எல்லை வரை நற்செய்தியை அறிவித்து சீடர்குழாமை கட்டியெழுப்பப் பணித்தது ஆசியாவில்தான். இன்றும் இங்குதான் இறை ஏக்கம் அதிகமாகக் காணப்படுகிறது என்பதையும் ஏற்கத்தான் வேண்டும்.

எனவே, ஆசியா முழுவதும் உயிர்த்த ஆண்டவர் கிறிஸ்துவின் அமைதி நிலவும் வரை, ஆசிய திருஅவையின் இதயம் ஒருபோதும் அமைதியடையாது என்பதை ஆசிய திருஅவை உணர்ந்து செயல்பட வேண்டும்.




# பினாங்கில் குருத்துவப் பணிக்கு இருவர் அருள்பொழிவு பெற்றனர்

பினாங்கு: கடந்த மார்ச் திங்கள் 28-ம் திகதி புக்கிட் மெர்தாஜாமில் உள்ள புனித அன்னம்மாள் (மைனர் பெசிலிக்கா) திருத்தலத்தில் திருத்தொண்டர்கள் ரெய்மண்ட் ராஜ் ஜெரேமியா மற்றும் டெஸ்மண்ட் ஜன்சென் டேவிட் அந்தோணி ஆகிய இருவருக்கும் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் குருத்துவ அருள்பொழிவு செய்தார்.

அன்று மாலை 7.00 மணிக்குத் தொடங்கிய இக்குருத்துவத் திருப்பலியில் கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களும், ஓய்வுப்பெற்ற பினாங்கு மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் மேதகு அந்தோணி செல்வநாயகம் அவர்களும், பினாங்கு மறைமாவட்ட அருள்பணியாளர்களோடு, இதர மறைமாவட்டங்களின் அருள்பணியாளர்களும், அருட்சகோதர சகோதரிகளும் பொதுநிலையினரும் கலந்துகொண்டனர். தொடக்கமாக, இத்திருப்பலியில் திருத்தைலம் ஆசீர்வதிக்கும் திருச்சடங்கும்,



அருள்பணியாளர்களின் குருத்துவ வாக்குறுதி புதுப்பித்தல் சடங்கும் இடம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து, ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் இரு திருத்தொண்டர்களின் வாக்குறுதிகளையும் உறுதிமொழி யையும் பெற்று, கரங்களில் திருத்தைலம் பூசி அருள்பொழிவு செய்தார்.

இறுதி உரையில் இரு அருள்பணியாள்களையும் பினாங்கு மறைமாவட்டத்திற்கு வரவேற்ற ஆயர், தமது நன்றியுரையில்


*புதிய அருள்தந்தையர் நற்கருணை வழங்குகின்றனர்*

அருள்தந்தை ரெய்மண்ட் ராஜ் அவர்கள் புனித அன்னம்மாள் மைனர் பெசிலிக்கா பங்கிலும் அருள்தந்தை டெஸ்மண்ட் ஜென்சென் நகர் பங்கிலும் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள் என்று ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் அறிவித்தார்.

இறைசமூகம் இருவரின் பெற்றோருக்கும் அவர்களின் அர்ப்பணத்திற்கு நன்றி மாலை சூட்டியது.


அருள்தந்தை ரெய்மண்ட் ராஜ்


அருள்தந்தை டெஸ்மண்ட்

# ‘புனித சவுல் வாழ்வில் ஒருங்கமைவு, பங்கேற்பு & மறைத்தூது’ விவிலிய கருத்தியல் சொற்பொழிவு

கோலாலம்பூர்: கடந்த மார்ச் திங்கள் 23,24 மற்றும் 25-ம் திகதிகளில் முறையே, ரவாங், புனித யூதா ததேயு, சிரம்பான் மினவுதல் அன்னை மற்றும் செந்தூல், புனித யோசேப்பு ஆகிய மூன்று ஆலயங்களிலும் ‘புனித பவுல் அடிகளின் வாழ்வில்: ஒருங்கமைவு, பங்கேற்பு மற்றும் மறைத்தூது எனும் தலைப்பில் விவிலியச் சொற்பொழிவு நடைபெற்றது. இச்சொற்பொழிவினை கேரளா, சுல்தான்பேட் மறைமாவட்டத்தின் ஆயரும், இந்திய கத்தோலிக்க ஆயர்கள் பேரவைகளின் விவிலிய பணிக்குழுவின் தலைவருமான மேதகு டாக்டர் அந்தோணி பீட்டர் அபீர் அவர்கள் வழிநடத்தினார்

ரவாங், புனித யூதா ததேயு பங்கில், பங்குத்தந்தை வின்சன்ட் தோமஸ் அவர்களின் ஆதரவில் சொற்பொழிவு தொடங்கியது. இப்பங்கிலிருந்தும் சுற்று வட்டாரத்திலிருந்து ஏறக்குறைய எண்பது பேர் கலந்துகொண்டனர்.

பின்னர், சிரம்பான் மினவுதல் அன்னை பங்கில் 24 மார்ச் 2023 அன்று இரவு 8.00 மணிக்கு நடைபெற்ற இதே தலைப்பிலான சொற்பொழிவு, பங்கின் விவிலியப் பணிக்குழுவின் ஏற்பாட்டிலும், பங்குத் தந்தை சேவியர் என்ரூ அவர்களின் ஆதரவிலும் நடைபெற்றது. இங்கு ஏறக்குறைய 250 பேர் கலந்துக்கொண்டனர்.



*சிரம்பான் சொற்பொழிவில் .....*

புனித பவுல் அடிகளின் வாழ்வில், அவர் எவ்வாறு ஒருங்கமைவு, பங்கேற்பு மற்றும் மறைத்தூதுப் பணிகளில் அயராது பங்கேற்றார் என்பதைத் தெள்ளத்தெளிவாக ஆயர் அவர்கள் எடுத்துரைத்தார். மேலும் இந்த திருத்தந்தையின் அழைப்பான ‘உங்கள் கூடாரங்களை விரிவாக்குங்கள்’ (எசாயா 54:2) என்பதற்கேற்ப நமது கிறிஸ்தவ வாழ்வில் அனைவரையும் உட்படுத்தும் வகையில், புனித பவுலைப் போன்று சொந்த கூடாரங்களை விரிவுப்படுத்துமாறு ஆயர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.



*புனித யூதா ததேயு பங்கில் சொற்பொழிவாற்றும் ஆயர் அந்தோணி பீட்டர் அபீர்*



*செந்தூல் சொற்பொழிவில் .....*

கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் விவிலிய ஆணையத்தின் ஏற்பாட்டில் நடந்தேறிய இச்சொற்பொழிவு நிகழ்ச்சிகளைப் பேரருட்தந்தை ஜேம்ஸ் ஞானபிரகாசம் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சகோ. ஆர்.கே.சாமி இந்நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளராகப் பொறுப்பேற்றிருந்தார்.

23 மார்ச் 2023-அன்று இரவு 8.00 மணிக்கு

மூன்றாவது, இறுதிச் சொற்பொழிவாக செந்தூல், புனித யோசேப்பு பங்கில் பங்குத்தந்தை பெடரிக் ஜோசப் அவர்களின் ஆதரவில் 25, மார்ச் 2023, சனிக்கிழமையன்று காலை 9.00 மணித் தொடக்கம் மாலை 4.00 மணிவரை நடைபெற்றது.

மேற்கண்ட மூன்று சொற்பொழிவுகளிலும்

நிறைவாக, ஆயரின் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்த பேரருட்தந்தை ((Msgr) ஜேம்ஸ் ஞானபிரகாசம் அவர்களுக்கு நன்றி கூறி இக்கருத்தியல் சொற்பொழிவு ஒரு நிறைவைக் கண்டது.

*-யூலியன், செந்தூல்*

# காலநிலை மாற்றத்தால் பாதிப்பிற்குள்ளாவது ஏழைகளே!

வத்திக்கான்: ஒவ்வொரு நாளும் பல மாற்றங்களைக் கண்டு வரும் இவ்வுலகில், காலநிலை மாற்றத்தின் காரணமாக ஏற்படும் பெருமழை, பெருவெள்ளம், சூறாவளிகள், புயல்காற்று போன்றவற்றால் ஏழைகள்தாம் அதிகப் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்று கவலை தெரிவித்துள்ளனர் இயற்கை ஆர்வலர்கள்.

கடந்த வாரத்தின் பிற்பகுதியில் மொசாம்பிக் மற்றும் மலாவியில் Freddy என்ற வெப்பமண்டல புயல் ஏற்படுத்திய பாதிப்பால் 200-க்கும் மேற்பட்டோர் இறந்ததைத் தொடர்ந்து இவ்வாறு கவலை தெரிவித்துள்ளனர் இயற்கை ஆர்வலர்கள்.

தூய்மையான நீர், உடல்நலம் மற்றும் உடல்நல வசதிகள், அத்துடன் அவசரகாலப் பணம் மற்றும் உணவு ஆகியவற்றை வழங்குவதற்கு மனிதாபிமான அமைப்புகள் தற்போது பேரழிவின் அளவை மதிப்பிட்டு வருகின்றன என்றும், ஆனால் அதே வேளையில், தொலைதூரப் பகுதிகளில் உள்கட்டமைப்புகள், பலவீனமடைந்து இருப்பதால் நிவாரணப் பணிகளைத் தொடர்வதில் அதிகம் தாமதம் ஏற்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர் இயற்கை ஆர்வலர்கள்.

தேவைப்படுபவர்களுக்கு முக்கிய உதவி கிடைப்பதை உறுதி செய்ய விரிவான பதில் தேவைப்படும் அதேவேளையில், இயற்கை ஆர்வலர்கள், நீண்ட காலமாக மலாவியின் அவலநிலையை எடுத்துக்காட்டியபோதிலும், அதன் மக்கள் அதற்குச் செவிமடுக்காததால், இப்போது அதற்கான பலனை அறுவடை செய்து வருகின்றனர் என்றும் இயற்கை ஆர்வலர்கள் தங்களின் வேதனையை வெளிப்படுத்தியுள்ளனர்.

கடந்த பிப்ரவரி மாதம் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் அமர்வில், கடல் மட்டம் உயர்வதால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து, அதன் பொதுச்செயலாளர் அந்தோனியோ கூட்டேரஸ் அவர்கள், வெள்ளம் மற்றும் கடலோர அரிப்பு முழு சமூகங்களையும் அதிகப் பாதிப்பிக்குள்ளாக்குவதால் அனைத்து மக்களும் புலம்பெயர்ந்து செல்ல நேரிடும் என்றும் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

*செல்வராஜ் சூசைமாணிக்கம்-- வத்திக்கான்*

# ஆண்டவரின் உயிர்ப்பு நமது புதுவாழ்வுக்கான அழைப்பு!

இன்று ஆண்டவரின் உயிர்ப்பு பெருவிழாவை நாம் கொண்டாடுகின்றோம். 2-ம் வாசகத்தில் புனித பவுல் கொலோசியருக்கு எழுதிய மடலிலே, “உயிர்த்தவரைக் கடவுள் அனைவருக்கும் வெளிப்படுத்தாமல் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட சாட்சிகளுக்கே வெளிப்படுத்தினார்” என்பதை 41-வது வசனத்திலே வாசிக்கலாம். உலக மக்களுக்கு இயேசுவைப் பற்றி முழக்கம் செய்து சாட்சியம் பகர கடவுளே எங்களுக்கு பணித்தார் என்பதையும் 42இல் தொடர்ந்து வாசிக்கலாம். எனவே நமதாண்டவரின் இறப்பும் உயிர்ப்பும் பல்வேறு சாட்சிகளால் நிரூபிக்கப்பட்ட மறையுண்மையாகும். ஆக இந்த மறையுண்மையை ஏற்று இதற்கு சான்று பகருகின்றேனா என்பது பற்றி சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

கொலோசையருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய இரண்டாம் வாசகத்தில் இதைத்தான் புனித பவுல், “நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால், மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள்” என்று கூறுகின்றார். ஆகவே, இயேசுவின் உயிர்ப்பு சீடர்கள் நடுவில் மாற்றத்தை ஏற்படுத்தியது போன்று, நம்முடைய வாழ்விலும் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். அந்த மாற்றம் நம்மை மேலுலகு சார்ந்தவற்றை நாடுபவர்களாக இருக்கச் செய்ய வேண்டும்.

மத்தேயு நற்செய்தி **28:20-ல்** வாசிப்பது போல “உலகம் முடியும் வரை அவர் எந்நாளும் நம்மோடு இருக்கிறார்” எனும் தைரியத்தில் பவனி வருவோம். அன்றாட வாழ்க்கையில் இயேசு கற்பித்த படிப்பினைகளில், குறிப்பாக அன்பு, நீதி, நேர்மை, ஏழைகளின் பால் அக்கறை, ஒழுக்கமான வாழ்க்கை போன்றவற்றை கடைபிடிக்கும் போது அங்கே இயேசுவின் உடனிருப்பு வெளிப்படும்.

திருத்தூதரான புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில், “கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும். (1கொரி 15:14) என்கிறார். இயேசு உண்மையாகவே உயிர்த்தெழுந்தார் என்பதற்கு நம்மிடம் இருக்கும் முதன்மையான சான்று வெற்றுக் கல்லறையாகும். அடுத்து இயேசுவின் உயிர்ப்புக்கு சான்றாக இருப்பது திருத்தூதர்களின் சான்றுகள் தான்.

மிகவும் ரகசியமாக இந்த நிகழ்வு நடைபெறவில்லை. நள்ளிரவில் மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது என்று (மத்தேயு 28:2) விவிலியம் சொல்கிறது. உயிர்த்த பிறகு சீடர்கள் மற்றும் ஏராளமானவர்களுக்கு இயேசு காட்சி கொடுத்தார். கிறிஸ்தவர்களை சித்ரவதை செய்து வந்த சவுலையும் ஆட்கொண்டார். இயேசுவின் உயிர்ப்பைப் பற்றி சவுலாக இருந்து பவுலாக மாறிய பின், “கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால், எங்கள் தூதுரை பொருளற்றதே, உங்கள் விசுவாசமும் பொருளற்றதே” (1 கொரி 15:14) என்று வலியுறுத்திக் கூறுகிறார்.

எனவே, இன்று நாம்தான் வாழும் கிறிஸ்தவுக்கு சாட்சிகள் என்பதை வாழும் வாழ்க்கையின் வழி உலகிற்கு எடுத்துரைப்போம். இறையருளைப் பெற்று மகிழ்வோம். அல்லேலூயா!

*-ஆவி. டேவிட், குளுவாங்*

**பாஸ்கா பெருவிழா ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | தி.பணி 10:34,37-43 |
| திருப்பாடல் | 118: 1-2. 16-17. 22-2 |
| வாசகம்: | கொலோ 3:1-4 |
| நற்செய்தி: | யோவான் 20:1-9 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- பாஸ்கா ஞாயிறு**